**நெல் கொள்முதல்: குவிண்டாலுக்கு ரூ. 50 உயர்வு**

First Published : 11 Jun 2010 12:00:00 AM IST

புது தில்லி, ஜூன் 10: மத்திய அரசு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ. 50 உயர்த்தியுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் குவிண்டாலுக்கு ரூ. 1,000-ம் தொகையைப் பெறுவர்.

÷நெல்லுக்கான கொள்முதல் விலையைத் தீர்மானிப்பதற்கான பொருளாதார விவகாரங்களுக்கா மத்திய அமைச்சரவைக்குழு கூட்டம் பிரதமர் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷குறைந்தபட்ச ஆதரவு விலை அனைத்து ரக நெல்லுக்கும் பொருந்தும். இதன்படி ஏ கிரேடு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1,030 கிடைக்கும் என்று கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

÷கடந்த ஆண்டு நெல்லுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ. 50 உயர்த்தப்பட்டு ரூ. 950 வழங்கப்பட்டது. அக்டோபரில் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு இந்த விலை உயர்வு பொருந்தும்.

**தமிழகத்தில் சிறிய வெங்காயத்தின் விலை உயரும்!**

First Published : 10 Jun 2010 09:53:20 AM IST

ஈரோடு, ஜூன் 9: தமிழகத்தில் சிறிய வெங்காயத்தின் விலை உயரும் என்று ஈரோடு வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) வே.பரமசிவம் தெரிவித்தார்.

÷இந்தியா 2008-09ம் ஆண்டில் 77.29 லட்சம் டன் சிறிய மற்றும் பெரிய வெங்காயத்தை 5.54 லட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்தது.

சிறிய வெங்காயம் எனும் சாம்பார் வெங்காயம் தமிழகம், ஆந்திரம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

2008-09-ல் தமிழ்நாடு 3.20 லட்சம் டன் வெங்காயத்தை 0.30 லட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்தது. உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 10.51 டன்னாக இருந்தது. இந்த உற்பத்தியில் 80 சதத்திற்கும் மேல் சிறிய வெங்காயம் ஆகும்.

÷மொத்த வெங்காய உற்பத்தியில் 23 சதம் ஏற்றுமதி செய்யப்படுவதால், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையைப் பொருத்து, உள்நாட்டு விலை மாறுபடும். 2009-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சிறிய வெங்காயம் கிலோவிற்கு ரூ.22 வரை விற்றது.

உள்நாட்டு வரத்தை அதிகரித்து, விலையைக் கட்டுக்குள் வைக்க டிசம்பர் 2009-ல் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை மெட்ரிக். டன்னுக்கு 520 அமெரிக்க டாலராக உயர்த்தப்பட்டது.

மேலும் மார்ச்-ஏப்ரலில் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்தும் வரத்து அதிகரித்தது. இதனால் 2010 ஏப்ரலில் கிலோ ரூ.10-ஆகக் குறைந்தது. மேற்கூறிய விலை ஏற்றத்தாழ்வுகள் தமிழக சிறிய வெங்காய விவசாயிகளை பீதியடையச் செய்துள்ளது.

விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து வைப்பதா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இதன் பொருட்டு விவசாயிகளுக்குப் பயனளிக்கும் விதமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், கடந்த 10 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய விலை நிலவரங்களை ஆய்வு செய்தது. மேலும் திண்டுக்கல் மற்றும் ஒட்டன்சத்திரம் சந்தையில் ஆய்வு நடத்தியது.

கர்நாடக வரத்து ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்து விட்டது. தமிழகத்தில் தைப் பட்டத்தில் விதைத்த சிறிய வெங்காய அறுவடை தற்போது துவங்கியுள்ளது.

தேசிய கூட்டுறவு வேளாண் சந்தைகளின் கூட்டமைப்பு, 2010 ஏப்ரல் மாதத்தில் தென் மாநில ரகங்களுக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மெட்ரிக். டன்னுக்கு 415 அமெரிக்க டாலராகக் குறைத்துள்ளது.

÷இந்த குறைக்கப்பட்ட ஏற்றுமதி விலை மற்றும் தமிழகத்தின் சில இடங்களில் பரவலாகப் பெய்யும் கோடை மழை ஆகிய காரணங்களினால் வெங்காய விலை ஏறுமுகத்தில் இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் ஆய்வுகளின்படி, நல்ல தரமான வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.13 முதல் ரூ.15 வரை இருக்கும். சராசரி தர வெங்காயத்தின் விலை கிலோவிற்கு ரூ.10 முதல் ரூ.12 வரை இருக்கும். நல்ல நிறம் மற்றும் குறைந்த ஈரத்தன்மையுடன் கூடிய பெரிய காய்களை தரமான வெங்காயம் என வர்த்தகர்கள் கருதுகின்றனர்.

அறுவடை சமயத்தில் பல்லடம், திருப்பூர், உடுமலை மற்றும் கோவை பகுதிகளில் மழை பெய்தால், பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15-ஐ தாண்டும் வாய்ப்புகள் உள்ளன.

அதிகப்படியான வெப்பம் மற்றும் குறைந்த காற்றோட்டத்தால் தற்போது அறுவடை செய்யப்படும் வெங்காயம் சேமிக்க உகந்ததல்ல எனக் கருதப்படுகிறது. மேலும் சேமிப்பில் 30 சதத்திற்கும் மேல் இழப்பு ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன.

÷எனவே விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை சேமித்து வைக்காமல், உடனடியாக விற்பனை செய்யும்படி பரிந்துரைக்கப்படுகின்றனர். தற்போது பயிர் செய்து, வரும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அறுவடை செய்யும்போது நல்ல விலை கிடைக்கும். எனவே விவசாயிகள் இப்பருவத்தில் சிறிய வெங்காயம் பயிரிட பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**விவசாயிகள் குறைகள் ளைய புதிய ஏற்பாடு**

First Published : 10 Jun 2010 09:50:03 AM IST

திருச்செங்கோடு, ஜூன் 9: திருச்செங்கோடு வட்டம் பள்ளிப்பாளையத்தில் விவசாயிகள் குறைகள் களைய புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

÷இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் முரளீதரன் கூறியது:

பள்ளிப்பாளையம் விவசாயிகளின் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண குறைகள் பதிவு செய்யும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் பிரச்னைகளை வேளாண் விரிவாக்க மையத்தில் பதிவு செய்து வைக்கலாம். குறைகள் இதன் மூலம் உடனுக்குடன் களையப்படும். உடனே தீர்வு காண முடியாத குறைகளுக்கு தீர்வு கண்டவுடன் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்படும். முன்னுரிமை அடிப்படையில் குறைகளுக்கு தீர்வு காணப்படும் என்றார்.

**குறுவை சாகுபடி இலக்கு எட்டப்படுமா?**

First Published : 10 Jun 2010 10:36:14 AM IST

திருவாரூர், ஜூன் 9: காவிரி டெல்டா மாவட்டங்களில் பாசனத்துக்கு மேட்டூர் அணை திறக்கப்படுவதில் நிலவும் உறுதியற்ற நிலை காரணமாக, குறுவைப் பருவத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சாகுபடி இலக்கு எட்டப்படுவதில் நிச்சயமற்ற நிலை நிலவுகிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஜூன், ஜூலை மாதங்களில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. வேளாண் துறையும் நிகழாண்டுக்கு ஏறத்தாழ 1.15 லட்சம் ஹெக்டேரில் இச் சாகுபடியை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கமாக 43,000 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படும். இதில் ஆழ்குழாய் கிணற்றின் மூலம் தண்ணீர் பெற்று இதுவரை 3,000 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன. மேலும், ஏறத்தாழ 500 ஹெக்டேரில் நாற்றுகள் விடப்பட்டுள்ளன.

இதேபோல, திருவாரூர் மாவட்டத்தின் வழக்கமான குறுவைச் சாகுபடி பரப்பு 36,000 ஹெக்டேர். இதில் இதுவரை 2,600 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிவுற்றுள்ளன. ஏறத்தாழ 100 ஹெக்டேரில் நாற்றுகள் விடப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொருத்தவரை, வழக்கமான பரப்பு 36,000 ஹெக்டேர். இதில் இதுவரை 7,000 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன. ஏறத்தாழ 1,000 ஹெக்டேரில் நாற்றுகள் விடப்பட்டுள்ளன.

டெல்டா பகுதியில் வழக்கமாக குறுவைச் சாகுபடிக்கு ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால், அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் நிகழாண்டில் ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க இயலாத நிலை உள்ளது.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் கடந்த மார்ச் மாதத்தில் 74 அடியாக இருந்தது. காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளிலிருந்து போதிய நீர் வரத்து இல்லாததால், ஓரிரண்டு அடிகளே உயர்ந்து ஜூன் 1 ஆம் தேதி 76 அடியாக இருந்தது. புதன்கிழமை நிலவரப்படி, அணையின் நீர் மட்டம் 79 அடியைத் தொட்டுள்ளது. அணைக்கு நீர் வரத்து கடந்த ஒரு வாரமாகவே சற்று அதிகரித்து வருகிறது. ஜூன் 12-ல் அணை

திறக்காவிடில், டெல்டா மாவட்டங்களில் வழக்கமான சாகுபடி பரப்பான 1.15 லட்சம் ஹெக்டேரில் ஏறத்தாழ 50,000 ஹெக்டேரில்தான் குறுவை சாகுபடி மேற்கொள்ளும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர் வேளாண் துறையினர்.

ஆழ்குழாய் கிணறுகளை நம்பியே இந்த ஆண்டில் 50 சதப் பரப்புக்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டாலும், எங்கும் நிலவும் நிலத்தடி நீர் மட்டம் குறைவு, கடந்த இரு மாதங்களாக மழை பெய்யாமல் நிலவும் கடும் வெப்பம் மற்றும் மின் மோட்டார்களுக்குச் சீராக வழங்கப்படாத மின்சாரம் ஆகியவை காரணமாக, நிகழாண்டில் சாகுபடி பரப்பிலும் நெல் உற்பத்தியிலும் குறைவு ஏற்படும் என்கிறார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்டத் துணைச் செயலர் பி.ஆர். பாண்டியன்.

இந்நிலையில், நிகழாண்டில் வேளாண் துறை நிர்ணயித்துள்ள சாகுபடி இலக்கை எட்ட இயலாது என்பது ஒருபுறம் இருந்தாலும், இதனால் கிடைக்கும் (நெல்) மகசூலான ஏறத்தாழ 6.32 லட்சம் டன்னிலும் மிகப்பெரிய அளவுக்கு உற்பத்திக் குறைவு ஏற்படும் வாய்ப்புள்ளது.

**மேட்டூர் அணை ர்மட்டம் 79.04 அடி**

First Published : 10 Jun 2010 09:48:27 AM IST

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 79.04 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 8,032 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 41.00 டி.எம்.சி.

**விவசாயிகளுக்கு பண்ணைக் கல்வி!**

First Published : 10 Jun 2010 09:12:34 AM IST

கோவை, ஜூன் 9: வேளாண் பல்கலையின் தொலைதூரக் கல்வித் திட்டத்தில் பத்தாம் வகுப்பு படித்த விவசாயிகளுக்கு 3 ஆண்டு பண்ணைத் தொழில் சார்ந்த தொலைதூரக் கல்வி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் தெரிவித்தார்.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிய பயிர் ரகங்கள் வெளியீட்டு விழா,புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, உழவர் தின விழா புதன்கிழமை நடைபெற்றது.

ரூ.1.70 கோடி மதிப்பீட்டிலான 12 புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, புதிய பயிர் ரகங்களை வெளியிட்டு அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் பேசியது:

விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால், விவசாயிகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்பக் கருவிகளை காலதாமதமின்றி வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்கின்றனர். 1996ம் ஆண்டு இதே துறை அமைச்சராக இருந்தபோது, எதிர்காலத்தில் விவசாயத்திற்கு இயந்திரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். தற்போது,தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 100 நாள்கள் வேலை அளிக்கப்படுவதால், விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை மேலும் அதிகரித்து,விவசாயம் பாதிக்கப்படுகிறது.

நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துவருவது அச்சுறுத்தலாக உள்ளது. குறைந்த நீரைக்கொண்டு அதிக மகசூல் எடுத்து விவசாயிகள், தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

கடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தின்போது, 10ம் வகுப்பு படித்த விவசாயிகளுக்கு 3 ஆண்டு பண்ணைத் தொழில்நுட்பக் கல்வியை, தொலைதூரக் கல்வி மூலம் பயில அறிமுகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த தொலைதூரக் கல்வி,தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து

ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் இந்த ஆண்டு தொடங்கப்படும். இதனை விவசாயிகள் பயன்படுத்தி உணவு உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். செம்மை நெல் சாகுபடி மூலம் ஒரு ஹெக்டேருக்கு 8,580 கிலோ அரிசி உற்பத்தி  கிடைக்கிறது. செம்மை நெல் சாகுபடியைப் போன்று, இந்த பல்கலைக்கழகம் மற்றும் இக்ரிசாட் இணைந்து செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்களை கரும்பு விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 235 மெட்ரிக் டன்னுக்கும் கூடுதலாக உற்பத்தி கிடைக்கின்றது. எனவே, கரும்பு சாகுபடியில் செம்மைக் கரும்பு சாகுபடி தொழில் நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என்றார்.

வேளாண்மைத் துறை முதன்மை செயலர் கே.நந்த கிஷோர், ஆணையர் எஸ்.கோசலராமன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை. துணை வேந்தர் ப.முருகேசபூபதி,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.சந்தரமோகன்,வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர்  அதுல்ஆனந்த், விதைச் சான்றளிப்புத் துறை இயக்குநர் வை.கந்தசாமி, விவசாயத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் டாக்டர் கே.பி.ராமலிங்கம் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு பண்ணைக் கல்வி!**

First Published : 10 Jun 2010 09:12:34 AM IST

கோவை, ஜூன் 9: வேளாண் பல்கலையின் தொலைதூரக் கல்வித் திட்டத்தில்   பத்தாம் வகுப்பு படித்த விவசாயிகளுக்கு 3 ஆண்டு பண்ணைத் தொழில் சார்ந்த தொலைதூரக் கல்வி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் தெரிவித்தார்.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிய பயிர் ரகங்கள் வெளியீட்டு விழா,புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, உழவர் தின விழா புதன்கிழமை நடைபெற்றது. ரூ.1.70 கோடி மதிப்பீட்டிலான 12 புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, புதிய பயிர் ரகங்களை வெளியிட்டு அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் பேசியது:

விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால், விவசாயிகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்பக் கருவிகளை காலதாமதமின்றி வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்கின்றனர். 1996ம் ஆண்டு இதே துறை அமைச்சராக இருந்தபோது, எதிர்காலத்தில் விவசாயத்திற்கு இயந்திரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். தற்போது,தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 100 நாள்கள் வேலை அளிக்கப்படுவதால், விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை மேலும் அதிகரித்து,விவசாயம் பாதிக்கப்படுகிறது.

நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துவருவது அச்சுறுத்தலாக உள்ளது. குறைந்த நீரைக்கொண்டு அதிக மகசூல் எடுத்து விவசாயிகள், தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

கடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தின்போது, 10ம் வகுப்பு படித்த விவசாயிகளுக்கு 3 ஆண்டு பண்ணைத் தொழில்நுட்பக் கல்வியை, தொலைதூரக் கல்வி மூலம் பயில அறிமுகம் செய்யப்படும் என்று

அறிவிக்கப்பட்டது. இந்த தொலைதூரக் கல்வி,தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து
ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் இந்த ஆண்டு தொடங்கப்படும். இதனை விவசாயிகள் பயன்படுத்தி உணவு உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். செம்மை நெல் சாகுபடி மூலம் ஒரு ஹெக்டேருக்கு 8,580 கிலோ அரிசி உற்பத்தி கிடைக்கிறது. செம்மை நெல் சாகுபடியைப் போன்று, இந்த பல்கலைக்கழகம் மற்றும் இக்ரிசாட் இணைந்து செம்மை கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்களை கரும்பு விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 235 மெட்ரிக் டன்னுக்கும் கூடுதலாக உற்பத்தி கிடைக்கின்றது. எனவே, கரும்பு சாகுபடியில் செம்மைக் கரும்பு சாகுபடி தொழில் நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என்றார்.
வேளாண்மைத் துறை முதன்மை செயலர் கே.நந்த கிஷோர், ஆணையர் எஸ்.கோசலராமன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை. துணை வேந்தர் ப.முருகேசபூபதி,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.சந்தரமோகன்,வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் அதுல்ஆனந்த், விதைச் சான்றளிப்புத் துறை இயக்குநர் வை.கந்தசாமி, விவசாயத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் டாக்டர் கே.பி.ராமலிங்கம் பங்கேற்றனர்.

தினமலர்

**காவிரி நீரை வீணாக்காத வகையில் குடிநீர் திட்டம் காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் நல சங்கம் தமிழக அரசுக்கு**

திருச்சி: "ஒரு சொட்டு காவிரி நீரையும் வீணாக்காத வகையில் குடிநீர் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்' என்று காவிரி நீர்பாசன விவசாயிகள் நலச்சங்க செயல்தலைவர் மகாதானபுரம் ராஜாராம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தின் ஒரே ஜீவநதி காவிரி. மொழிவாரி மாநிலப்பிரச்னையால் உற்பத்தியாகும் இடம் கர்நாடகா, கேரளா மாநிலத்துக்கு போய்விட்டதால், அந்த மாநிலங்களில் கையில் காவிரி சிக்கித்தவிக்கிறது. மத்திய அரசின் நடுவர் மன்ற தீர்ப்புப்படி தமிழகத்துக்கு கர்நாடகா அளிக்கும் 205 டி.எம்.சி., நீர் போக, காவிரி நீர் பாயும் பகுதிகளில் பெய்யும் மழைநீர் ஆகியவற்றை சேமிக்க இதுவரை பெரிய திட்டம் ஏதும் போடப்படவில்லை. முதன்முறையாக கரூர் மாவட்டம் மாயனூர் கதவணை 183 கோடி ரூபாயில் கட்டப்படுகிறது. குடிநீருக்கு முக்கியத்துவம் என்ற அரசாணையால் விவசாயம் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. காவிரியிலிருந்து குடிநீருக்காக காவிரியின் இரு கரைகளிலும் பலவித சிறு, சிறு திட்டம்மூலம் எட்டிய வரை கொண்டு செல்லப்படுகிறது.

தமிழகத்தின் மிகப்பெரிய முன்னோடி திட்டமான ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டம் திருச்சி அருகே முத்தரசநல்லூரில் மூன்று குடிநீர் உறைகிணறுகளும், கடியாக்குறிச்சி அருகே மற்றொரு உறை கிணறும் தோண்டப்பட்டது. புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்கள் வழியாக ராமநாதபுரம் மாவட்டத்துக்கு அதிகமான குழாய் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. வழியில் 119 தரைதள கிணறுகளும், 601 மேல்மட்ட நீர் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 16 லட்சம் பேர் குடிநீர் வசதி பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. திட்டத்துக்கு 616 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சிறப்பான திட்டமாக தீட்டப்பட்ட இந்த குடிநீர் திட்டத்தில் பல இடங்களில் குழாய் வெடிப்பு ஏற்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. பல பகுதிகளில் இந்த நீரை விநியோகிக்க முறையான குழாய் பாதைகள் இல்லை. இதனால் ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்துக்கு செல்லும் குடிநீர் வீணாகிறது. திட்டத்தை தீட்டியவர்கள் தண்ணீரை தடையின்றி வீணாகாமல் விநியோகிக்க திட்டமிடவில்லை.

ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்துக்கு தினமும் 50 மில்லியன் லிட்டர் தண்ணீர் காவிரியிலிருந்து பம்பிங் செய்யப்படுகிறது. பல கோடி ரூபாய் செலவிட்டும் மக்களுக்கு சரியானபடி குடிநீர் கொடுக்கப்படவில்லை என்று புகாருடன், விவசாயத்துக்கான நீரும் வீணாக்குகிறார்கள் என்ற புகாரும் அரசு மீது கூறப்படுகிறது. இதேபோல் 1,915 கோடி செலவில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற பிரமாண்ட காவிரி நீர் கூட்டுக்குடிநீர் திட்டம் பல கோடிகளில் செயல்படுத்தப்படலாம். திட்டமிடுபவர்கள் சிந்தித்து, திறமையுடன், அவசரப்படாமல், தரமான முறையில் இத்திட்டங்கள் செயல்படுத்தாவிட்டால், காவிரி நீரை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு போதுமான நீர் கிடைக்காமல் போவதோடு, பல கோடி செலவிட்டும் குடிநீர் சரியாக கிடைக்காத அவலநிலையும் ஏற்படும். ஆகையால், காவிரியில் பல கோடியில் திட்டங்களை தீட்டுவதற்கு முன் காவிரி நீரை சேமிக்கும் திட்டங்களையும் செயலாற்ற வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறோம்.

குடிநீர் திட்டங்கள் ஒரு சொட்டு நீரையும் வீணாக்காத வகையில் திட்டமிடப்படவேண்டும். நீர் சேமிப்பு திட்டங்கள் காவிரிப்பூம்பட்டினம் வரை செயல்படுத்த வேண்டும். அப்போது தான் எதிர்கால தமிழகம் விவசாயம், குடிநீர் இரண்டிலும் தன்னிறைவு பெறும். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கரும்பு விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்ட கரும்பு விவசாயிகள் சங்க குறைதீர் கூட்டம் ஜூன் 18ம் தேதி மாலை நான்கு மணிக்கு கலெக்டர் அலுவலக பிரதான கட்டிட வளாக கூட்ட அரங்கில் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடக்கிறது.

கரும்பு பயிர் சாகுபடி பதிவு, கரும்பு அறுவடை செய்வதற்கு ஆட்கள் பற்றாக்குறை, பணம் பட்டுவாடா போன்ற விபரங்கள் விவாதிக்கப்பட உள்ளது. இக்கூட்டத்தில் கரும்பு சாகுபடி செய்யும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொள்ளலாம் என கலெக்டர் சண்முகம் வேண்டுகோள் விடுத்தார்.

**நெல் விலையை உயர்த்திக்கூறி நூதன மோசடி விவசாயிகளுக்கு தினமும் பல லட்சம் இழப்பு**

மன்னார்குடி: தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை, திருவாரூர், நாகை பகுதியான டெல்டா மாவட்டத்தில் தரகர்கள், வியாபாரிகள் சேர்ந்து அதிக விலைக்கு நெல்லை வாங்குவதாகக் கூறி விவசாயிகளிடம் கூடுதல் எடை போட்டு நூதன மோசடி செய்து வருகின்றனர். டெல்டா மாவட்டத்தின் பிரதான வாழ்வாதாரம் விவசாயம். ஆற்றுப்பாசனம் மற்றும் போர்வெல் வசதியுடன் குறுவை, சம்பா, தாளடி மற்றும் கோடைப்பயிர் என நான்கு பருவமாக வசதிக்கு ஏற்ப சாகுபடி செய்கின்றனர். அறுவடையாகும் நெல்லை விவசாயிகள் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சரியான எடையில், சரியான நெல்லை விற்று, அரசு நிர்ணயித்த தொகையை பெற்றுக் கொள்கின்றனர். இதுபோன்ற நெல் கொள்முதல் நிலையங்கள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து செயல்படாமல் ஆண்டுக்கு நான்கு முதல் ஐந்து மாதங்கள் மட்டுமே பெரும்பாலான இடங்களில் செயல்படுத்திவிட்டு மூடிவிடுகின்றனர்.

இதனால், அறுவடை செய்த நெல்லை விற்க வழியின்றி தனியாரிடம் விற்பனை செய்கின்றனர். அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குவிண்டால் நெல் ஆயிரத்து 50 முதல் ஆயிரத்து 100 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தனியார்கள் ஆயிரத்து 300 ரூபாய் எனக்கூறி கொள்முதலின்போது எடையில் நேரடியாக, மறைமுகமாக முறைகேடு செய்கின்றனர். மத்திய அரசு கொண்டு வந்த உணவுப்பொருள் கடத்தல் தடுப்பு பிரிவுச் சட்டத்தை இலகுவாக்கியதால் ஆந்திரா, கேரளா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் தமிழகத்தின் காஞ்சிபுரம், ஆரணி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி உட்பட பல வெளி மாவட்டங்களில் இருந்தும் நெல் வியாபாரிகள் டெல்டாவில் முகாமிடுகின்றனர். டெல்டா மாவட்டத்தில் உள்ள அந்தந்த பகுதி புரோக்கர் மூலம் நெல் இருப்பு வைத்துள்ள விவசாயிகளின் வீடுகளைத் தேடி இவர்கள் செல்கின்றனர். 61 கிலோ எடை கொண்ட மூடைக்கு 150 ரூபாய் கூடுதலாக வழங்குவதாகவும், வீட்டில் வந்து நெல் கொள்முதல் செய்வதாக கூறுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைகின்றனர். வியாபாரிகளின் மோசடி தெரியாமல் பாதிப்படைகின்றனர்.

உள்ளூர் புரோக்கர் மூலம் எடைபோடும் கூலி ஆட்களுக்கு வழங்கப்படும் கூலி ஆறு ரூபாய்க்கு பதில் பத்து ரூபாய் வழங்கி, எடைபோடும் போது தராசை சரி செய்தல், சாக்கு வைக்கும் பகுதியில் எடையை குறைவாக பதிவாகும் வகையில் செய்தல், விரல்களால் சாக்கை அழுத்தி பிடித்தல் போன்றவைகளை செய்கின்றனர். இதனால், 61 கிலோ மூடைக்கு 64 முதல் 65 கிலோ வேண்டும் என்று கேட்டும் கொள்முதல் செய்கின்றனர். நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒவ்வொரு மூடைக்கும் பல கிலோ நெல்லை கூடுதலாக ஏற்றிச் செல்கின்றனர். இவ்வாறு தினமும் 300 லாரிகளில் நெல் ஏற்றி வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதன் மூலம், டெல்டா மாவட்ட விவசாயிகளிடம் இருந்து தினமும் லட்சக்கணக்கான ரூபாயை புரோக்கர்கள் உதவியுடன் வியாபாரிகள் கொள்ளை அடித்து செல்வதாக விபரம் தெரிந்த விவசாயிகள் கூறுகின்றனர். அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் உரிய இடங்களில், ஆண்டு

முழுவதும் இல்லாததால் இந்நிலை தொடர்கிறது, என விவசாயிகள் புலம்புகின்றனர். தனியார் நெல் வியாபாரிகளின் இந்த மோசடியை அரசு கண்காணித்து முறைப்படுத்த வேண்டும். முறைகேடு செய்பவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**கலப்படம் செய்து விற்ற 120 லிட்டர் பால் பறிமுதல்**

ராசிபுரம்: ராசிபுரம் நகராட்சியில் விற்பனை செய்யப்பட்ட 120 லிட்டர் கலப்பட பால் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டது.
ராசிபுரம் நகராட்சி சுகாதார அலுவலர் ராம்குமார் தலைமையில், ஆய்வாளர்கள் லோகநாதன், பாஸ்கரன், பிரகாஷ் ஆகியோர் நகராட்சி பகுதியில் உரிமம் பெறமால் பால் விற்பனை செய்வோர் குறித்து ஆய்வு செய்தனர். ஒன்பது பால் வியாபாரிகளிடம் நடத்திய ஆய்வில், 120 லிட்டர் பாலில் தண்ணீர் கலப்படம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த பால் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டது. "நகராட்சியில் உரிய உரிமம் பெறாமல் பால் வியாபாரம் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, நகராட்சி கமிஷனர் தனலட்சுமி எச்சரித்துள்ளார்.

**காண்டூர் கால்வாய் புனரமைப்பு பணிக்கு "ஐடியா' திட்டக்குழு சார்பில் முதல்வருக்கு கோரிக்கை**

பொள்ளாச்சி : காண்டூர் கால்வாய் புனரமைப்பு பணியால் பாசனம் பாதிக்காத வகையிலும், கட்டுமான பணிகள் தடைபடாத வகையிலும் திட்டமிடவேண்டும் என்று பாலாறு படுகை திட்டக்குழு சார்பில் முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்ட பாலாறு படுகை திட்டக்குழு தலைவர் பரமசிவம், முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு:பி.ஏ.பி., திட்டத்தின் உயிர்நாடியாக விளங்கும் காண்டூர் கால்வாய் இயற்கை சீற்றங்களாலும், சிலரின் சுயநலத்தாலும் சேதமடைந்து விநாடிக்கு 300 கனஅடி வீணாகிறது. இதனால், திருமூர்த்தி அணையில் இருந்து பாசனம் பெறும் நான்கு லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பாதிக்கப்படுகிறது.

காண்டூர் கால்வாயை போர்க்கால அடிப்படையில் முழுமையாக புதுப்பித்தால் தான் பாசன திட்டத்தை பாதுகாக்க முடியும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நடப்பு பட்ஜெட்டில் 127.5 கோடி ரூபாயை காண்டூர் கால்வாயை புனரமைக்கும் பணிக்கு அரசு ஒதுக்கியதற்கு நன்றி தெரிவிக்கிறோம்.தென்மேற்கு பருவமழை காலத்தில் பி.ஏ.பி., திட்டத்திற்கு உட்பட்ட தொகுப்பு அணைகளுக்கு வரும் தண்ணீரை, ஜூலை மாதம் முதல் அடுத்தாண்டு மே மாதம் வரையிலும் காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கொண்டு வர வேண்டும். அதைக் கொண்டு ஆண்டுக்கு இரண்டு மண்டலங்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் வழங்க வேண்டும்.தற்போது காண்டூர் கால்வாயை புனரமைக்கும் பணிகளுக்கு கணிசமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், பணிகள் விரைவில் துவங்கப்படும் என்று பி.ஏ.பி., விவசாயிகள் ஆவலோடு காத்திருக்கின்றனர். இந்நிலையில் காண்டூர் கால்வாய்

பணிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு, அதே நேரத்தில் திருமூர்த்தி அணையில் பாசனம் பெறும் நான்கு லட்சம் ஏக்கர் பாசனமும் பாதிக்காதவகையில் புனரமைப்பு பணியை துவங்க வேண்டும்.

ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலத்தில் காண்டூர் கால்வாய் அமைந்துள்ள மலைப்பகுதிளில் மழைப்பொழிவு அதிகமாக இருக்கும் என்பதால் கால்வாய் பணிகள் பாதிக்கப்படும். அந்த காலகட்டத்தில் பரம்பிக்குளம் தொகுப்பு அணைகளுக்கு வரும் தண்ணீரை காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கொண்டு சென்று, இரண்டு மண்டல பாசனத்திற்கு தலா மூன்று சுற்றுகளில் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளலாம்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலும் கோடை வெயில் காலத்தில் காண்டூர் கால்வாயில் தண்ணீர் எடுப்பதை நிறுத்தி விட்டு கால் வாய் பணிகளை மேற்கொண்டால் சிரமம் இருக்காது. விவசாயிகளுக்கும் பெரிய பாதிப்பு இருக்காது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும். விவசாயிகள் சார்பில் திட்டக்குழு கேட்டுக்கொண்ட படி உத்தரவுகள் வெளியிடப்பட்டால், இரண்டாம் மண்டல பாசனத்திற்கு மூன்று சுற்றுக்கு வரும் ஜூலை முதல் செப்டம்பர் வரை தண்ணீர் திறக்க உத்தரவிடவேண்டும். அதன்பின், அக்டோபர் முதல் டிசம்பர் வரை மூன்றாம் மண்டல பாசனத்திற்கு மூன்று சுற்றுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும். இதில் காலதாமதம் ஏற்பட்டால் பாசனமும், கால்வாய் கட்டும் பணியும் பாதிக்கப்படும். இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"டான் டீ' செக்போஸ்ட் வனத்துறைக்கு மாறியது**

வால்பாறை : "டான்டீ' தேயிலை தோட்ட கழகம் வசம் இருந்த செக் போஸ்ட் மீண்டும் வனத்துறைக்கு கைமாறியது.தாயகம் திரும்பிய இலங்கை தமிழர்களுக்காக கடந்த 1969 ம் ஆண்டு நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம் வால்பாறையிலும் தமிழக அரசு தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்தை (டான்டீ) ஏற்படுத்தியது. இதற்காக வனத்துறைக்கு சொந்தமான இடத்தை குத்தகைக்கு பெற்று வனப்பகுதி அழிக்கப்பட்டு தேயிலை தோட்டங்களாக உ<ருவாக்கப்பட்டன. தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்துவருகின்றனர். வால்பாறையிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சின்கோனா டான்டீ தேயிலை தோட்ட கழகத்தில் மட்டும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.இங்குள்ள டான்டீ செக் போஸ்ட் கடந்த பல ஆண்டுகளாக டேன்டீ நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்தது.

இந்நிலையில் வால்பாறை ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும், சுற்றுலாப்பயணிகள் அதிக அளவில் இந்த வழித்தடத்தில் சென்று வருவதாலும் இந்த செக் போஸ்ட் மீண்டும் வனத்துறை கைபற்றியது.மானாம்பள்ளி வனச்சரக அலுவலர் ஆரோக்கியராஜ்சேவியர் தலைமையில் பாரஸ்டர், கார்டு,வாட்சர் உட்பட நான்கு பேர் இந்தப்பணியில்

ஈடுபட்டுள்ளனர்.வனத்துறையினரின் கட்டுப்பாட்டில் சின்கோனா செக் போஸ்ட் வந்துள்ளதால் வாகன சோதனை தணிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**தென்னை மட்டையை தூளாக்கும் இயந்திரம் செயல்விளக்கம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சியை சேர்ந்த விவசாயி தயாரித்த தென்னை மட்டையை தூளாக்கும் இயந்திரத்தின் செயல்விளக்கம், வேளாண் துறையின் ஆத்மா திட்டத்தின் கீழ் நேற்று நடந்தது.பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்திற்கு <உட்பட்ட ஆவல்சின்னாம்பாளையத்தில் உள்ள தென்னந்தோப்பில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தின் கீழ் தென்னை மட்டை மற்றும் ஓலையை தூளாக்கும் கருவியின் செயல்விளக்கம் நடந்தது.வட்டார தொழில்நுட்பக்குழு ஒருங்கிணைப்பாளரும், வேளாண்மை உதவி இயக்குனருமான மோகனசுந்தரம் தலைமை வகித்தார்.

இயந்திரத்தின் செயல்விளக்கத்தில், ஒரு தென்னை மட்டையை முழுமையாக தூளாக்கி வெளியில் தள்ளுவது விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது.இயந்திரத்தை வடிவமைத்த விவசாயி நடராஜன் பேசியதாவது: தென்னந்தோப்பில் ஒரு ஹெக்டருக்கு ஆண்டுக்கு ஏழு டன் மட்டை கிடைக்கிறது. அதை உரமாக்கினால் உரச்செலவு குறைந்து, சிறந்த இயற்கை உரம் கிடைக்கிறது. மட்டையை துகளாக்கி மரத்தை சுற்றிலும் வட்ட பாத்தியில் போடும் போது, தண்ணீர் ஆவியாவது தடுக்கப் பட்டு ஈரப்பதம் தக்க வைக்கப்படுகிறது. இக்கருவியை டிராக்டரில் இணைத்து பயன்படுத்தலாம்.

இதனை இயக்கும் போது மணிக்கு இரண்டு முதல் மூன்று லிட்டர் எரிபொருள் செலவாகிறது. இயந்திரத்தின் பராமரிப்பு செலவு மிகவும் குறைவாகும். இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள பிளேடு 500 மணி நேரம் உழைக்கக்கூடியது. ஒரு மணி நேரத்தில் மூவாயிரம் மட்டையை அரைத்து தூளாக்கும். இந்த இயந்திரத்தை வடிவமைக்க 85 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. வேளாண் பொறியில் துறை மூலம் அரசுக்கு பரிந்துரை செய்ய பட்டுள்ளது. இவ்வாறு<, விவசாயி நடராஜன் பேசினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் மோகனசுந்தரம் பேசியதாவது: தென்னை மட்டையை தூளாக்கும் இயந்திரத்தை வடிவமைத்துள்ளதாக ஆத்மா திட்டத்தின் வட்டார தொழில்நுட்பக்குழு கூட்டத்தில் தெரியவந்தது. அந்த தொழில்நுட்பத்தை அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும் சென்றடைய செய்தால் பலன் கிடைக்கும் ன்பதால் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றார்.வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் சரவணன் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் நிர்மலா, துணை வேளாண்மை அலுவலர் அசோகன், உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேஷன், தமிழக விவசாயிகள் சங்க செயலாளர் முத்துசாமி, ஆத்மா திட்ட தலைவர் கிருஷ்ணகுமார், முன்னாள் பாசன சங்க தலைவர் சின்னப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பால் குளிரூட்டும் நிலைய பணியை விரைவுபடுத்த விவசாயிகள் கோரிக்கை**

வேடசந்தூர்: வேடசந்தூரில் பால் குளிரூட்டும் நிலைய பணியை விரைவு படுத்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வேடசந்தூர் மிகவும் பின் தங்கிய வறட்சி பகுதியாகும். இங்கு 30க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இந்த சங்கங்கள் மூலம் பால் சேகரிக்கப் பட்டு லாரிகளில் திண்டுக்கல்லுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. பால் எடுத்து செல்வதில் காலதாமதம் ஏற்படும் போது பால் கெட்டு போகிறது.இப்பிரச்னையை தீர்க்க விருதலைப்பட்டி, புளியமரத்துக்கோட்டை சங்கங்களில் மூன்று ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டது. புளிய மரத்துக் கோட்டையில் கட்டட வேலை முடிந்து இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள் ளன. ஆனால் குளிரூட்ட நிலையம் செயல்பட வில் லை. விருதலைப்பட்டியில் இந்த பணி பாதியில் நிற்கிறது.அதிகாரிகளின் அலட்சியத்தால் இந்த திட்ட பணியில் தாமதம் ஏற்படுகிறது. மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகும்.

**எள் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

ராஜபாளையம்: ராஜபாளையம் பகுதியில் எள் விலை வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். ராஜபாளையம் பகுதியில் முதல் போகமாக நெல்லை அடுத்து இரண்டாம் போகமாக எள் பயிரிடப்பட்டது. கடந்த ஆண்டு, எள் குவிண்டாலுக்கு 5,000 ரூபாய் வரை கிடைத்தது. நடப்பாண்டிலும் அதே விலை கிடைக்கும் என்ற ஆவலில் ஏராளமான நெல் விவசாயிகள், எள் பயிரிட்டனர். குறிப்பாக கண்மாய்களையொட்டிய வயல்களிலும், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதி நிலங்களிலும் அதிகளவில் நெல் பயிரிடப்பட்டது. வேறெந்த ஆண்டையும் விட கூடுதல் ஏக்கர்களில் எள் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது பரவலாக அறுவடை நடந்து வரும் நிலையில், எள் விலை வீழ்ச்சி அடைய துவங்கியுள்ளது. ஒரு வாரத்திற்கு முன் வரை குவிண்டாலுக்கு 3,500 ஆக இருந்த எள் விலை, நேற்று 2,800 ரூபாய்க்கு விற்றது. எள் தேவை அதிகம் உள்ள நிலையில், வரத்து அதிகரித்தாலும் விலை சீராக இருக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், வியாபாரிகள் குறைந்த விலை நிர்ணயித்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கடன் வாங்கி பயிர் செய்த விவசாயிகள் பலர், கிடைத்த விலைக்கு எள்ளை விற்பனை செய்து வருகின்றனர்.

**கோடைப்பயிராக கத்திரிக்காய் சாகுபடி தீவிரம் : விவசாயிகள் மகிழ்ச்சி**

கோவில்பட்டி : கோவில்பட்டி பகுதியில் கோடைப்பயிராக கத்திரிக்காய் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த இரண்டு மாதங்களாக செடி வளர்த்ததில் தற்போது காய்ப்பிடிக்கும் பருவத்தை எட்டியிருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோவில்பட்டி பகுதியில் மானாவாரி விவசாயமே பிரதானமாக இருந்து வருகிறது. எப்போது மழை பெய்யும், எப்போது விவசாயத்தை துவங்கலாம், இந்தாண்டாவது லாபமான மகசூல் கிடைக்குமா என எதிர்பார்த்து காத்திருப்பது இப்பகுதி விவசாயிகளின் தற்போதைய நிலையாகும். ஆனாலும் ஒவ்வொரு ஆண்டும் கோவில்பட்டி பகுதி விவசாயிகள் தங்களது விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். கோவில்பட்டி பகுதியை சுற்றியிருக்கும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் விவசாயத்தின் நிலை இப்படியிருந்தால், இதற்கு மாறாக ஒருசில கிராமங்கள் ஆண்டு முழுவதும் விவசாயத்தை நம்பியே பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

பொதுவாக விவசாயிகள் எப்போதுமே விளையும் நிலத்தை தரிசாக விடாமல் பார்த்துக் கொள்வதில் கவனமாக இருப்பார்கள். குறிப்பிட்ட காலங்களில் செய்யப்படும் விவசாய காலத்திற்கு பின்னர் குறைந்தபட்சம் ஆடு மாடுகளுக்கு தீவனமாகும் நாற்றையாவது பயிரிட்டு வைப்பது வழக்கம். அதேநேரத்தில் கண்மாய் மற்றும் குளத்துநீர் பாசனம் இருந்தால் ஆண்டு முழுவதும் ஏதோ ஒருவகையில் விவசாயத்தை செய்து கொண்டு தான் இருக்கின்றனர். குறிப்பாக கண்மாய் மற்றும் குளத்துநீர் பாசனத்தை கையாளும் கிராமங்களான மூப்பன்பட்டி, முடுக்கலான்குளம், மேலப்பட்டி உள்ளிட்ட சில கிராமங்களில் தற்போது கோடைப்பயிராக கத்தரிக்காய் சாகுபடி செய்து வருகின்றனர்.

தவிர கழுகுமலை பகுதியில் களப்பாகுளம் மற்றும் கரிசல்குளம் கிராமங்களில் கத்தரிக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோவில்பட்டி பகுதியை பொறுத்தவரை கடந்த பருவத்தில் நெல் பயிரிட்டு கடந்த பிப். அல்லது மார்ச்சில் அறுவடையை முடிந்த பின்னர் கோடைப்பயிர் விவசாயப்பணிகள் துவங்கியதாக விவசாயிகள் கூறுகின்றனர். மேலும் கடந்த மார்ச் கடைசியில் முக்கிய கோடைப்பயிரான கத்தரிக்காய், வெள்ளை சோளம், தீவனச்சோளம் எனப்படும் நாற்று ஆகியவற்றை சாகுபடி செய்துள்ளதாக கூறுகின்றனர். இதில் பெரும்பாலான விவசாயிகள் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கத்தரிக்காய் சாகுபடி செய்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த மார்ச் கடைசியில் செடி நட்டிய பின்னர் தொடர்ந்து 15 நாட்களுக்கு குறையாமல், மருந்து தெளித்து, உரம் வைத்து கண்ணுங்கருத்துமாக பார்த்து வளர்த்துள்ளதாக கூறுகின்றனர். தொடர்ந்து இரண்டு மாதங்கள் செடியை வளர்த்த நிலையில் தற்போது ஏப். மற்றும் மே மாதங்களில் கத்தரிக்காய் செடிகளில் பூக்கள் காய்களாக மாறி பலன் கொடுக்க துவங்கியுள்ளது. மேலும் செடிகளுக்கு நோய் ஏற்படாமல் பார்த்துக் கொண்டால் தொடர்ந்து மூன்று மாதங்கள் கத்தரிக்காய் கிடைக்கும் என்கின்றனர். இந்நிலையில் கோவில்பட்டி பகுதியில் கடந்த சில நாட்களாக மிரட்டிய மழையால் கத்தரிக்காய் சாகுபடியில் சற்று தொய்வும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஏனெனில் கத்தரிக்காய் செடியை பொறுத்தவரை கோடைகால பயிராக இருப்பதால் அதிக தண்ணீர் தேவைப்படாத நிலையில், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. இந்நிலையில் மழை தொடர்ந்து பெய்தால்

கத்தரிக்காய் செடியின் வீரியம் குறைந்து பூக்கும் தன்மையை இழக்குமென விவசாயிகள் கூறுகின்றனர். அதேநேரத்தில் வாரத்திற்கு இரண்டு மழை வீதம் மட்டும் பெய்தால், கத்தரிக்காய் செடிகளுக்கு தண்ணீர் கிடைப்பதோடு, செடிகளின் தன்மை மாறாமல் பாதுகாக்கப்படும் என்கின்றனர். தவிர கண்மாய் மற்றும் குளங்களுக்கு நீர்வரத்தும் அதிகரிக்கும் என்று கூறுகின்றனர்.

பொதுவாக கத்தரிக்காய் செடியை முறையாக பராமரித்தால் ஒவ்வொரு 5 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 10 முதல் 15 மூடை கத்தரிக்காய் கிடைக்குமெனவும், கத்தரிக்காய் கொட்டப்படும் சாக்குகளை பொறுத்து ஒரு மூடைக்கு 50 முதல் 60 கிலோ வரையில் எடை கொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கின்றனர். கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு வரை மார்க்கெட்டில் முதல் விலை கிலோ ரூ.20ல் துவங்கிய தொடர்ந்து வரத்தை பொறுத்து ஒன்றிரண்டு ரூபாய் விலை குறைவாக இரண்டாம் விலையில் நின்றதாகவும், தற்போது முதல் விலை ரூ. 10ல் துவங்கி ஒன்றிரண்டு குறைந்து இரண்டாம் விலை 8 ரூபாயில் நிற்பதாக கூறுகின்றனர். கடந்த சில நாட்களில் கத்தரிக்காய் விலை அதிகப்படியாக கீழே வந்து விட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

மேலும் தற்போதைய சீசனில் கத்தரிக்காய் வரத்து அதிகமாக இருப்பதால் விலையும் குறைந்து விட்டதாகவும், வரத்து குறைவதை பொறுத்து விலையேற வாய்ப்பிருப்பதாகவும் கூறுகின்றனர். பொதுவாக நாட்டு கத்தரிக்காயையே பொதுமக்கள் விரும்பி வாங்குவதால் கத்தரிக்காய் வரத்திற்கு ஏற்ப விற்கும் தன்மையும் அதிகரிக்கும் நிலையில் விவசாயிகளுக்கு அதிகபட்ச விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கோவில்பட்டி பகுதியில் கத்தரிக்காய் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது.

**புதியம்புத்தூரில் காளான் வியாபாரியால் கதிகலங்கி நிற்கும் சுயஉதவிக் குழுவினர்**

புதியம்புத்தூர் : புதியம்புத்தூரில் காளான் வியாபாரியால் கதிகலங்கி நிற்கும் சுய உதவிக் குழுவின் சரிவை தடுத்து நிறுத்த வேண்டுமென சுய உதவிக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதியம்புத்தூர் அருகேயுள்ள வள்ளிநாயகிபுரத்தில் சுய உதவிக் குழுவினர் காளான் வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். காளான் வளர்ப்பு சம்பந்தமாக பயிற்சி பெற்று காளான் நன்கு வளர்த்தார்களே தவிர அதை மார்க்கெட் செய்ய முடியாமல் திணறி வந்தனர் இச்சுய உதவிக் குழுவினர். அது சமயம் தான் தயாரிக்கும் அனைத்து காளான்களையும், தானே விலைக்கு வாங்கிக் கொள்வதாக தூத்துக்குடி பிஅன்ட் டி காலனியைச் சேர்ந்த குமாரராஜா சுய உதவிக்குழுவிற்கு சென்றுள்ளார். காளான் வளர்க்க சிறிய செட் அமைத்து 2 லட்சம் லோன் வாங்க நினைத்த சுய உதவிக் குழுவிற்கு 5 லட்சம் லோன் வாங்கித் தருவதாக சொல்லி தூத்துக்குடியில் உள்ள ஒரு பாங்கில் கடனும் பெற்றுத்தர உதவியுள்ளார். 2 1/2 லட்சம் செலவில் ஓலை செட் அமைத்து காளான் தயாரிப்பிற்குரிய தளவாட சாமான்கள், வைக்கோல், தண்ணீர் டிரம், மற்ற செலவுகளுக்கு 2 1/2 லட்சமும் செலவு செய்து, காளான் தயாரிப்பில் தீவிரமாக சுய உதவிக்குழு ஈடுபட்டது.

ஆரம்பத்தில் 1 கிலோ காளான் மொத்தமாக வாங்குபவர்களுக்கு 80க்கும், சில்லரையாக வாங்குபவர்களுக்கு 120க்கும் விற்பனை செய்து வந்துள்ளனர். ஓரளவு லாபம் இருந்தது. பாங்க்கில் கடன் வாங்க உதவிகரமாக இருந்ததால் 1 கிலோ காளான் ரூ.40க்கு தூத்துக்குடி குமாரராஜாவிற்கு காளான் சப்ளை செய்துள்ளனர்.

ஆரம்பத்திலேயே 40 ரேட்டிற்கு 2000 கிலோ காளானை வாங்கிக் கொண்டு போன நபர் திரும்ப சுய உதவிக்குழுவிற்கு எந்த பணமும் திருப்பித் தரவில்லையாம். பாக்கி வகைக்காக கொடுத்த செக்கும் திரும்பி விட்டது. உடனே பதறிப்போன சுய உதவிக்குழுவினர் காளான் விற்பனை செய்த பணத்தை அந்த நபரிடமிருந்து திருப்பி வாங்கித் தரும்படி புதியம்புத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்துள்ளனர். ஓட்டப்பிடாரம் யூனியன் சேர்மன், தாசில்தார், மாவட்ட கலெக்டர் ஆகியோரிடம் மோசடி செய்த நபர் மீது புகார் மனு கொடுத்தும் யாதொரு நடவடிக்கையுமில்லை.

இதனால் பாங்க் கடன் 5 லட்சம் சுய உதவிக்குழு தலையில் விழுந்துள்ளது. அது மட்டுமில்லாமல் காளான் வளர்ப்பு செட் கூரை அமைத்து 1 ஆண்டு ஆகிறது. இன்னும் 1 வருடமானால் கூரை எவ்வித பயன்பாட்டிற்கும் ஆகாது. எனவே காளான் பாக்கி தொகையை வசூல் செய்து பாங்க் கடனிற்கு கட்ட வேண்டும். இந்த கூரை செட்டில் கோழி வளர்க்கலாம். காளான் கூரை செட் தனியார் நிலத்தில் போடப்பட்டுள்ளது. அவர் அந்த நிலத்தில் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்த விரும்புகிறார். அவருக்கும் நிலத்தை ஒப்படைக்க வேண்டும்.

எனவே காளான் பாக்கியை அந்த தனிப்பட்ட நபரிடமிருந்து போலீஸ் மூலம் பெற்றுத்தர ஏற்பாடு செய்து சுய உதவிக்குழு மீண்டும் செயல்பட ஆவண செய்ய வேண்டுமென இக்குழுவினர் விரும்புகின்றனர். இக்குழுவில் காளான் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களும் எந்த வேலையும் கிடைக்காமல் வெறுமனே உள்ளனர். எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வுகாண மோசடி நபரிடமிருந்து பணத்தை திரும்ப வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

தினத்தந்தி

## பயிரிடும் பரப்பளவு உயர்ந்து வருவதால் மஞ்சள் உற்பத்தி அதிகரிக்கும்



எஸ் சுஜாதா
கோயம்புத்தூர்

நடப்பு ஆண்டில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருவதால் இதன் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மஞ்சள் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மஞ்சள் சாகுபடி என்பது ஒரு கடுமையான பணியாகும். எனினும் இது விவசாயிகளுக்கு அதிக லாபம் தரக் கூடிய பயிராக உள்ளது. அண்மைக் காலத்தில் மஞ்சள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. நம் நாட்டில் மங்கலப் பொருளாக கருதப்படும் மஞ்சள், சுப நிகழ்ச்சிகளில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் நறுமணப் பொருளாகும். இது, உணவு, மருந்து மற்றும் அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பு துறைகளில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

கையிருப்பு

மேற்கண்ட துறைகளில் இதற்கான தேவை மிகவும் உயர்ந்து வரும் நிலையில், உள்நாட்டில் கையிருப்பு அநேகமாக தீர்ந்து விட்டதால், விலை அதிகரித்துள்ளதாக தெரிகிறது. சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் ரூ.4,200–ஆக இருந்த ஒரு குவிண்டால் மஞ்சள் விலை, சுமார் நான்கு மடங்கு அதிகரித்து, தற்போது ரூ.16,000–ஆக உயர்ந்துள்ளது.

நடப்பு ஆண்டில் 36 லட்சம் மூட்டை மஞ்சள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது (ஒரு மூட்டை 75 கிலோ). மஞ்சள் பயிரிடும் பரப்பளவு 30 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த மஞ்சளில் 90 சதவீதம் உள்நாட்டிலேயே பயன்படுத்தப்படுகிறது. 10 சதவீதமே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மஞ்சள் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் பயன்பாட்டில் இந்தியா உலகிலேயே முதல் இடத்தில் உள்ளது. தென் மாநிலங்களில் ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் மஞ்சள் அதிக அளவில் விளைகிறது.

நம் நாட்டில் மகாராஷ்டிர மாநிலம் சாங்லி, ஆந்திர மாநிலம் நிஜாமாபாத் மற்றும் தமிழ்நாட்டில் ஈரோடு ஆகிய பகுதிகள் மஞ்சள் உற்பத்தி மற்றும் வர்த்தகத்திற்கான முக்கிய மையங்களாக உள்ளன. சென்ற 2008–09–ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகள் 9,000 ஹெக்டேர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்தனர். இது, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் குறைவான அளவாகும்.

எதிர்பார்ப்பு

இந்நிலையில் நடுப்பு பருவத்தில் இங்கு சாகுபடி பரப்பளவு 15 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால், மஞ்சள் உற்பத்தி உயர்ந்து, நடப்பு ஆண்டிலேயே இதன் விலை ஓரளவு குறையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டில் பொதுவாக மஞ்சள் சாகுபடி பணிகள் மே மாதத்தின் இறுதி வாரத்தில் தொடங்கி, ஆகஸ்டு மாதம் வரை நீடிக்கும். அறுவடை ஜனவரி மாதத்திலிருந்து தொடங்கும். எனினும் நடப்பு ஆண்டில், தமிழகம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராக ஆகிய மாநிலங்களில் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ள விவசாயிகள், மே மாதம் முதல் வாரத்திலேயே சாகுபடி பணிகளைத் தொடங்கியுள்ளதாக தெரிகிறது.

## உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.74%–ஆக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், மே 29–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 16.74 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 16.55 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள் போன்றவற்றின் விலை மிகவும் அதிகரித்திருந்தது.
குறிப்பாக, பருப்பு வகைகளின் விலை 31 சதவீதம் உயர்ந்திருந்தது. மேலும், பால் (21.1%), பழங்கள் (18.7%), அரிசி (7%), கோதுமை (3%) போன்வற்றின் விலையும் அதிகரித்திருந்தது. இருப்பினும், உருளைக்கிழங்கு (30.87%) மற்றும் வெங்காயம் (12.27%) ஆகியவற்றின் விலை குறைந்திருந்தது.
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற ஏப்ரல் மாதத்தில் 9.59 சதவீதமாக இருந்தது. இது, மார்ச் மாதத்தைவிட சற்று குறைவாகும். நடப்பு நிதி ஆண்டில், பாரத ரிசர்வ் வங்கி நாட்டின் பணவீக்க விகிதம் 5.5 சதவீத அளவிற்கு இருக்கும் என முன்பு மதிப்பீடு செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## குன்னூரில் நடந்த ஏலத்தில் 100 சதவீத தேயிலை தூள்களும் விற்பனை

குன்னூர், ஜுன்.11–
குன்னூரில் நடந்த ஏலத்தில் 100 சதவீத தேயிலை தூள்களும் விற்பனை யானது.
கூட்டுறவு தொழிற்சாலைகள்
நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. இந்த

*தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள இன்கோ சர்வ் ஏல மையத்தில் ஏலம் விடப்பட்டு வந்தது.*
*கடந்த 2003–ம் ஆண்டு உலகிலேயே முதன் முறையாக இன்கோசர்வ் ஏல மையத்தில் கம்ப்யூட்டர் மூலம் ஏலம் கூறும் முறை அமுல்படுத்தப் பட்டது. இந்த நிலையில் இன்கோசர்வ் ஏல மையத்தில் இருந்த கம்ப்யூட்டர்கள் பழுதடைந்ததால் வாய்மொழி ஏலம் மூலம் ஏலம் கூறப்பட் டது.*
தேக்கம்
*அதன் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் 14–ந் தேதி முதல் இன்கோசர்வ் ஏல மையம் தனியார் ஏல மையமான குன்னூர் தேயிலை ஏல மையத்திற்கு மாற்றப்பட்டது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் ஏற்கனவே தேயிலை தூள் தேக்கம் அடைந்து இருந்தது. கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் தேயிலை தூளும், தனியார் தேயிலை ஏல மையத்தில் கம்ப்யூட்டர் மூலம் ஏலம் கோரப்பட்டதால் தேக்கம் அடைந்தது. கடந்த 2 மாத காலமாக சுமார் 29 லட்சம் கிலோ தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. இதனால் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை களுக்கு பச்சை தேயிலை வழங்கும் விவசாயி கள் கடும் அதிருப்திக்கு உள்ளா யினர்.*
*இன்கோசர்வ்வில் ஏலம்*
*இதனை தொடர்ந்து கடந்த 2–ந் தேதி முதல் மீண்டும் இன்கோசர்வ் வளாகத்தில் ஏலம் தொடங்கப்பட்டது.இந்த ஏலம் வாய்மொழி யாக நடத்தப்பட்டது. 2–வது ஏலம் நேற்றுமுன்தினம் இன்கோசர்வ் வளாகத்தில் நடைபெற்றது. மொத்தம் 5 லட்சத்து 94 ஆயிரத்து 216 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 3 லட்சத்து 43 ஆயிரத்து 505 கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 50 ஆயிரத்து 711 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர்.உள்நாட்டு வர்த்தகர்களும் அதிக அளவில் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் ஏலம் எடுத்ததால் 100 சதவீத தேயிலை தூளும் விற்பனையானது.*
*இலை மற்றும் டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாய் முதல் 42 ரூபாய் வரையிலும், உயர்விலை தேயிலை தூள் 50 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

## ஆதிவாசிகளுக்கு பண்ணை குறித்து தோட்டக்கலை துறை அதிகாரி ஆய்வு

*பந்தலூர்,ஜூன்.11–*
*பந்தலூர் தாலுகா அய்யங்கொல்லி கள்ளிச்சால் பகுதியில் ஆதிவாசி மக்களுக்கு துல்லிய பண்ணை அமைப்பது குறித்து கூடலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் தர்மலிங்கம் ஆய்வு செய்தார். ஆய்வுக்கு பின்னர் அவர் கூறும் போது, தேசிய வேளாண்மை திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணை அமைப்பது குறித்து பயிற்சி முகாம்கள் நடத்தப்படும். இந்த பண்ணை பணிகளுக்கு அதிகளவு ஆட்கள் தேவையில்லை. அதிக லாபம் பெறலாம். பயிர்களை உற்பத்தி செய்ய ஆதிவாசி மக்களை ஊக்கப்படுத்தப்படும். இந்த உற்பத்திக்காக அய்யங்கொல்லி கூட்டுறவு வேளாண்மை சங்கம் மூலம் கடன் வசதி ஏற்படுத்தி தரப்படும். அந்த கடன்களை ஆதிவாசி விவசாயிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி செலுத்தி விட வேண்டும். துல்லிய பண்ணை அமைக்க வாங்கும் கடனுக்கு தோட்டக்கலை துறை மூலம் மானியம் வழங்கப்படும் என்று கூறினார்.*
*இந்த ஆய்வின் போது தோட்டக்கலை அலுவலர் சுரேஷ்ராஜா, உதவி வேளாண்மை அலுவலர் சுப்பன் ஆகியோர் உடன் இருந்தனர்.*